[1974 சனவரி 28

Meeting of Zonal Council on Sales-Tax and Excise Duties

* 201 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any meeting of the South Zonal Council on Sales-Tax and Excise Duty was held in Madras city during May, 1973;

(*b*) if so, the details thereof; and

(*c*) the views of the Government expressed at this meeting.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இந்த சவுத் சோனல் கவுன்சிலில் தமிழ் நாடு அரசின் சிபாரிசுகள் எவையெவை அங்கீகரிக்கப் பட்டன ? குழு நிறைவேற்றிய தீர்மானங்கள் யாவை ? அமுல் நடத்தப் பட்டிருக்கும் தீர்மானங்கள் எவை என்பனவற்றைக் கூறமுடியுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : எந்தெந்த சிபாரிசுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன, புறக்கணிக்கப்பட்டன என்ற விவரங் கள் மத்திய அரசிடமிருந்து வரவில்லை. தற்போது கொடுக்கப்பட்ட விவரங் களைத் தவிர வேறு விவரங்கள் அரசாங்கத்திடம் இப்போது இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்த விற்பனை வரிக் குழு பரிந்துரைகளின் அமுல் சரிவர நடைபெற்று வருகிறதா ? மாநில ஆய்வுக் குழு ஏற்படுத்த வேண்டுமென்ற சிபாரிசை ஏற்றுக்கொண்டு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, நமது அரசாங்கத்தின் சார்பில் தரப் பட்ட சிபாரிசுகள் பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பன போன்ற விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை.

இராமநாதபுரம் மாவட்ட தியாகிகளுக்கு வழங்கப்பட்ட நிலம்

* 202 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

இராமநாதபுரம் மாவட்டத்தில், தியாகி மானிய நிலங்கள் எத்தனை பேருக்கு எவ்வளவு வழங்கப்பட்டு இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இராமநாதபுரம் மாவட்டத்தில் 120 தியாகிகளுக்கு ஆக மொத்தம் 591·83 ஏக்கரா நிலம் வழங்கப்பட்டது.

(* 384-392-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.)